விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 10 ஞாயிற்றுக்கிழமை (24.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 187

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்ட

ராம்கோ சீமெந்து

## கம்பஹாவில் தேடுதல் 203 பேர் கைது

(கொழும்பு)

கம்பஹா பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 203 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை இவ் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கம்பஹா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்களில் 76 பேர் சந்தேகத்தின் (06 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் ஊடுருவலைத் தடுக்க தமிழ் நாட்டில் மிதக்கும் பொலிஸ் மையம்

### தமிழகப் பொலிஸ் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் நாட்டுக்குள் பிரவேசிப்பதை தடுக்கும் வகையில் தமிழ நாட்டின் கரையோர மாவட்டங்களில் மிதக்கும் பொலிஸ் மையங்கள் இரு மாத காலததுக்குள் செயற்படவுள்ளதாக தமிழக பொலிஸ் பணிப்பாளர் நாயகம் முகர்ஜி தெரிவித்துள்ளார். குறித்த பொலிஸ் மையங்கள் தற்சமயம நாகை, தூத்துக்குடி, இராமநாதபுரம், கடலூர், சென்னை, கன்னியாகுமரி மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவை அமைக்கப்பட்டவுடன் பொலிஸ் மையமொன்றில் ஒரு பொலிஸ் பரிசோதகரும் 36 பொலிஸ் உத்தியோகத்தர்களும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இவர்கள் பயன்படுத்துவதற்கென பொலிஸ்மையமொன்றிற்கு 2 (06 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைத் தளபதி யாழ்ப்பாணம் விஜயம்

(கொழும்பு)

யாழ்.பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்வதற்கு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னாகொட நேற்று முன்தினம் விஜயம் செய்தார். கடற்படைத் தளபதி யாழ்ப்பாணத்திலுள்ள சகல தீவுப் பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிட்டுள்ளார்.

அத்துடன் அப் பகுதிகளில் தற்போதுள்ள பாதுகாப்பு நிலைமைகளை மேலும் பலப்படுத்துவதற்கான (06 ஆம் பக்கம் பார்க்க)

# மங்களவின் கட்சிக்கு எவரும் தாவினால் நாடாளுமன்றத்தை கலைத்துவிடுவேன்

## கட்சி அங்கத்தவர்களுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் (மக்கள் பிரிவு) கட்சிக்கு ஆளும் தரப்பிலிருந்து யாரேனும் தாவினால் நாடாளுமன்றத்தை கலைக்கும் சூழ்நிலைக்கு தள்ளப்படுவேன் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் விசேட கூட்டம் அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

(06 ஆம் பக்கம் பார்க்க)

## உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்குப்பின் அறிக்கை எதுவும் வெளியிடும் நோக்கம் இல்லை

### எரிக்சொல் ஹெய்ம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத் தொடரின் இறுதியில் கூட்டறிகை எதுவும் வெளியிடப்பட்மாட்டாது என நோர்வேத்

மோதல்களுக்கும் மத்தியில் அங்கு சமாதான முயற்சிகளின் தற்போதைய சூழ்நிலை குறித்து விரிவாக ஆராய இலங்கைக்கான கொடையாளி நாடுகளின் இணைத் தலைமை நாடு

ஒஸ்லோவில் சந்திக்கவிருக்கின்றனர்.

இது குறித்து நோர்வே வெளிநாட்டு அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில், இலங்கையின் தற்போதைய நிலை குறித்து மதிப்பீடு செய்ய நோர்வேயினால் நடாத்தப்படவுள்ள இந்த மாநாட்டில் இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிக

## வெளிவிவகார அமைச்சர் நேபாளம் விஜயம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம யப்பான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று புறப்பட்டு செல்கிறார். இவ் விஜயத்தின்போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் யப்பானியப் பிரதமர் மற்றும் அந் நாட்டு அமைச்சர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத் தொடரின் இறுதியில் கூட்டறிக்கை எதுவும் வெளியிடப்படமாட்டாது என நோர்வேத் தரப்புத் தெரிவித்துள்ளது. இலங்கையில் அதிகரித்து வரும் வன்முறைகளுக்கும் மோதல்களுக்கும் மத்தியில் அங்கு சமாதான முயற்சிகளின் தற்போதைய சூழ்நிலை குறித்து விரிவாக ஆராய இலங்கைக்கான கொடையாளி நாடுகளின் இணைத் தலைமை நாடுகளின் உயர் பிரதிநிதிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நோர்வேயின் தலைநகரான பொன்றில், இலங்கையின் தற்போதைய நிலை குறித்து மதிப்பீடு செய்ய நோர்வேயினால் நடாத்தப்படவுள்ள இந்த மாநாட்டில் இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளாக அமெரிக்காவின் சார்பில் அதன் பிரதி ராஜாங்க அமைச்சர் (06 ஆம் பக்கம் பார்க்க)

செல்கிறார். இவ் விஜயத்தின்போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் யப்பானியப் பிரதமர் மற்றும் அந் நாட்டு அமைச்சர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இதனிடையே யப்பானிய வர்த்தகர்களையும் சந்தித்து (06 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசாங்கத்தை கண்டித்து தென்னாபிரிக்காவில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தென்னாபிரிக்கத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு ஏனைய அமைப்புக்களுடனும் மக்களுடனும் ஒன்று சேர்ந்து இலங்கை அரசை கண்டித்து நேற்று மாபெரும் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியது. இலங்கை அரசும் அதன் ஆயுதப் படைகளும் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தும் அட்டூழியங்களைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பல்வேறு இன மற்றும் மதக்குழுக்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மக்கள் இந்த பேரணியில் கலந்து கொண்டார். இலங்கை அரசே தமிழர்களைக் கொல்லாதே! தமிழர்களை பூண்டோடு அழிப்பதை உடனடியாக நிறுத்து!தமிழினப்படுகொலையை நிறுத்து! தமிழீழ மண்ணில் (06 ஆம் பக்கம் பார்க்க)




# ஐ.தே.கவில் இருந்து மேலும் இருவர் விரைவில் அரசாங்கத்துடன் இணைவர்

## அமைச்சர் சந்திரசேன தகவல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து மேலும் இரண்டு முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் அரசாங்கத்துடன் இணைந்து ஆதரவை வெளிப்படுத்தவுள்ளனர். இதற்கான பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றுள்ளன. சிறிலங்கா சுதந்திரக்கட்சியினை பிளவுபடுத்த ஒரு நாளும் இடமளிக்கப்படமாட்டாது என தேசத்தை கட்டியெழுப்புவதற்கான அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள அமைச்சில் இடம் பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இந்தக் கருத்தினைத் தெரிவித்தார். அமைச்சர் தொடர்ந்தும் இந்த மாநாட்டில் உரையாற்றுகையில் இன்று அரசியல் நிலைமை தொடர்பாக நாம் ஆராய்ந்து பார்ப்போமே (06 ஆம் பக்கம் பார்க்க)

# மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்த அரசாங்கத்துக்கு பலமான நிலை தேவை

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டுமாயின் அரசாங்கம் வலுவான நிலையில் நின்று பேச வேண்டிய தேவையிருக்கிறது என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். அனைத்துலக ஊடகமான ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த நேர்காணலில் இதனைக் கூறியுள்ளார்.

பயங்கரவாதத்துக்கு இராணுவ ரீதியான பதில் தரப்பட்டு வருகிறது. அதனால் இனப்பிரச்சினைக்கான அரசியல் ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட (06 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானம் தொடர்பில் இடம்பெறும் சந்திப்பு குறித்துக் கூட்டாக அறிக்கை வெளியிடப்படும்

## க.கா.குழு - அரச சமாதான செயலகம் இணக்கம்

(கொழும்பு)

சமாதானச் செயற்பாடு தொடர்பில் சமாதான செயலகத்திற்கும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கும் இடையில் நடைபெறும் வழக்கமான சந்திப்புக்களின் பின்னர் கூட்டாக ஊடக அறிக்கை விட இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பில் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் லாஸ் சொல்பேர்க்கும் சமாதானச் செயலகத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி ரஜீவ விஜேசிங்கவுக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பில் தமிழ் மக்களின் பாதுகாப்புப் பற்றி யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்த ஆதங்கத்துக்குப் பதிலளிக்கும் முகமாகப் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இடைக்கிடையே அரசாங்கம் சில விசேட நடவடிக்கைகளை எடுப்பதால் அத்தகைய நடவடிக்கைகளை மக்கள் தெரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் வெளிப்படையாகவும் உரிய நடைமுறைகளுக்கு அமைவாகவும் இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பொறுப்புப் பற்றி நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டிய தேவை பற்றியும் கலாநிதி விஜேசிங்க குறிப்பிட்டார்.

அதாவது அண்மையில் பத்திரிகை அறிக்கை ஒன்றில் படைத் தரப்பினர் ஆட்கடத்தலில் ஈடுபடுவதாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இத்தகைய அறிக்கைகள் சமாதானச் செயற்பாட்டின் இணைப்பிரியாத ஓர் அம்சம் தொடர்பான நம்பிக்கையைப் பாதிக்கக்கூடும். ஆதலால் அக்கூற்றை நிராகரித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு மறுப்பு ஒன்றை விடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்த அறிக்கைக்கு பலவிதமாகப் பலராலும் அர்த்தம் கற்பிக்கலாம் என விளக்கிய யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு படையினர் சம்பந்தப்பட்டிருப்பதாக ஆணித்தரமாக கூறியிருப்பது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அறிக்கைகளில் சரியாகச் சுட்டிக்காட்டுவதாக இல்லை என குறிப்பிட்டு மறுப்பு ஒன்றை விடுப்பது தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளுக்கு வசதியளிக்கும் முகமாக சமாதான செயலகம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் குறிப்பாக படையினரால் கிரமமாக ஒழுங்கு செய்யப்படும் விமான சேவைகளின் ஊடாக விடுக்கப்பட்டதற்கிணங்க யாழ்ப்பாணத்திற்கான பயண வசதிகளை செய்து கொடுக்கப்படுவதுடன் அவசர தேவைகளுக்காக விசேட ஏற்பாடுகளைச் செய்யவும் படையினர் தயாராகவுள்ளனர் எனவும் தெரிவித்தது.

இதேவேளை சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு சமாதான செயலகத்தினர் உள்நாட்டுக் கண்காணிப்பாளர்களை மேலும் வினைத்திறத்துடன் பயன்படுத்துமாறு செயலாளர் நாயகம் பிரேரித்ததோடு வெகுவிரைவில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகரித்த ஆட்பலத்துடன் செயற்படும் என்பதால் அத்தகைய சந்தர்ப்பத்தில் உள்நாட்டுக் கண்காணிப்பாளர்களுடன் அடிக்கடி தொடர்பு கொள்வது சாத்தியமாகும் என ரஜீவ விஜேசிங்க தெரிவித்தார். (ச-5)

## இராணுவத்தின் 58-வது பிரிவு ஆரம்பம்

இராணுவம் புதிதாக உருவாக்கி வரும் 58-வது டிவிசன் மணலாற்றைத் தளமாகக் கொண்டியங்கும் என்று கொழும்பு இராணுவ ஆய்வர்ளர்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் - வவுனியா சாலைக்கென்று 57-வது டிவிசன் உருவாக்கப்பட்டது போன்று மணலாற்றுப் பகுதிக்கு 58-வது டிவிசன் உருவாக் கப்படுகின்றது. மணலாறு தற்போது திருகோணமலையின் 22 -வது டிவிசனின் கீழ் உள்ளது. 58-வது டிவிசனின் தளபதியாக பிரிகேடியர் மஹேஸ் சேனநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் கொழும்பு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் 83-வது ஜனனதினம் அனுஷ்டிப்பு

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவை நினைவு கூருவதற்கு செய்ய வேண்டிய சிறந்த விடயம் தற்போதைய அரசாங்கத்தைத் தோற்கடிப்பதே என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா நாட்டு மக்களுக்காக அளப்பரிய சேவைகளைச் செய்தவர் என ரணில் விக்கிரமசிங்க சுட்டிக் காட்டினார். ரணசிங்க பிரேமதாசாவின் 83-வது ஜனனதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதேவேளை இவ் வைபவம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கொத்தா வில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட மற்றும் தொகுதி அதிகாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. (ச-3)

## இலங்கை அதிபர் சேவை தரம் III ற்கு கிளி.,முல்லைத்தீவிலிருந்து அழைக்கப்பட்டோர்

இலங்கை அதிபர் சேவை தரம் IIIஇற்கு கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவிலிருந்து 149 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சியிலிருந்து 76 பேரும் முல்லைத்தீவிலிருந்து 73 பேரும் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். அழைக்கப்பட்டோரின் சுட்டிலக்கம் வருமாறு;

| கிளிநொச்சி | | | முல்லைத்தீவு | | |
|---|---|---|---|---|---|
| 1300838 | 1360256 | 1360532 | 1241112 | 1340270 | 1340526 |
| 1300841 | 1360273 | 1360546 | 1340010 | 1340284 | 1340530 |
| 1310635 | 1360290 | 1360550 | 1340023 | 1340298 | 1340543 |
| 1311081 | 1360302 | 1360563 | 1340037 | 1340300 | 1340557 |
| 1320187 | 1360316 | 1360577 | 1340040 | 1340313 | 1340560 |
| 1320830 | 1360320 | 1360580 | 1340068 | 1340327 | 1340574 |
| 1340071 | 1360333 | 1360594 | 1340085 | 1340330 | 1340588 |
| 1360012 | 1360347 | 1360606 | 1340099 | 1340344 | 1340591 |
| 1360057 | 1360350 | 1360610 | 1340114 | 1340358 | 1340603 |
| 1360060 | 1360364 | 1360623 | 1340128 | 1340361 | 1340617 |
| 1360074 | 1360378 | 1360637 | 1340131 | 1340375 | 1340620 |
| 1360091 | 1360381 | 1360668 | 1340145 | 1340392 | 1340634 |
| 1360103 | 1360407 | 1360685 | 1340159 | 1340404 | 1340648 |
| 1360117 | 1360424 | 1360699 | 1340162 | 1340418 | 1340651 |
| 1360120 | 1360438 | 1360700 | 1340176 | 1340421 | 1340665 |
| 1360134 | 1360441 | 1360714 | 1340180 | 1340435 | 1340679 |
| 1360148 | 1360455 | 1360728 | 1340193 | 1340449 | 1360026 |
| 1360151 | 1360469 | 1360731 | 1340205 | 1340452 | 1360030 |
| 1360179 | 1360472 | 1360745 | 1340219 | 1340466 | 1360043 |
| 1360182 | 1360486 | 1360759 | 1340222 | 1340470 | 1360260 |
| 1360196 | 1360490 | 1360762 | 1340236 | 1340483 | 1360640 |
| 1360208 | 1360501 | 1360776 | 1340240 | 1340497 | 1360654 |
| 1360211 | 1360515 | 1360780 | 1340253 | 1340509 | 1360671 |
| 1360225 | 1360529 | 1360793 | 1340267 | 1340512 | 1370360 |
| 1360239 | | 1360805 | | | 1370769 |
| 1360242 | | 1380549 | | | 1380200 |
| | | 1380720 | | | |

## யாழ்ப்பாணம் முதல் கிளாலி வரையும் இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டில்

### யாழ்.இராணுவத் தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாகர்கோவில் முதல் கிளாலி வரையான பகுதி இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் இந்தப் பகுதிகளில் எக்காரணம் கொண்டும் புலிகள் முன்னேற முடியாதவாறு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தினால் நேற்று முன்தினம் காலை கொழும்பிலிருந்து யாழ்.குடாநாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்ட ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்டளைத் தளபதி மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, யாழ்.குடாவிலுள்ள மக்களுக்கு அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

சனி, ஞாயிறு தினங்கள் உட்பட வாரத்தில் ஏழு நாள்களும் கொழும்பு – யாழ்.விமான சேவைகள் நடைபெறுகின்றன. நாள் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் விமானம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் பொதுமக்கள் எதுவித தடையுமின்றி சென்று வரக் கூடிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோன்று பலாலி விமான நிலையம் வரை பஸ் சேவைகள் நடைபெறுகின்றன.

இதேவேளை அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை, வணக்க ஸ்தலங்கள் ஆகியவற்றிற்கு பொது மக்கள் சென்று வரக் கூடிய வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-5)

## அமெ.-இலங்கை ஒப்பந்தத்தினை முழுமையாகச் சமர்ப்பிக்க முடியாதா?

### ஜே.வி.பி. கேள்வி

. அமெரிக்காவுடன் இலங்கை அரசாங்கம் செய்து கொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்திலுள்ள 11 உப பிரிவுகளையும் அரசாங்கத்தினால் ஏன் நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க முடியாது? அந்த ஒப்பந்தத்தில் மறைப்பதற்கு என்னதான் இருக்கின்றது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய் மூல விடைக்கான கேள்வி நேரம் முடிபடைந்ததன் பின்னர், சபை முதல்வரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வாவிடம் விளக்கம் கேட்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், அமெரிக்கா -இலங்கைப் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக முழுவிபரங்களையும் நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்திடம் கோரியிருந்தது. எனினும் அரசாங்கம் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட 11 உப பிரிவுகளையும் நாடாளுமன்றத்தில் இன்றுவரையுமே சமர்ப்பிக்கவில்லை. அதனை மூடி மறைப்பதற்கு முயற்சி செய்கின்றது என்றார். (ச)

புறொயிலர் உயிர்க் கோழி இறைச்சி விற்பனைக்கு உண்டு

புறொயிலர் உயிர் இறைச்சிக் கோழி, கல்பேட் கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: NEW R.S.K FARM மான் பாடசாலை வீதி, உடுவில். (138)

## தொப்பிக்கலயில் புலிகள் மட்டுமே இருக்கின்றனர்

(கொழும்பு)

தொப்பிக்கலப் பிரதேசத்தில் தற்போது விடுதலைப்புலிகள் மட்டுமேயிருப்பதாகவும் அங்கு பொது மக்கள் எவரும்இல்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; தொப்பிக்கலப் பிரதேசத்தில் உள்ள விடுதலைப்புலிகளை முற்றாக ஒழிப்பதற்கு இராணுவத்தினர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

விரைவில் இப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும். இதுவரை தொப்பிக்கலப் பிரதேசத்திலிருந்து விடுதலைப்புலி உறுப்பினர்கள் 45 பேர் இராணுவத்தினரிடம் சரணடைந்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் தற்போது பாரிய உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளதால் அவர்கள் வசமுள்ள சாதாரண மக்களையும் அவர்கள் கொலை செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

(திவயின)

காரைநகர் - புகலி

சிவசுப்பிரமணியர் ஆலய அலங்கார உற்சவம் -2007



4 ஆம் நாள் உற்சவம்

நிகழும் சர்வசித்து வருடம் ஆனித் திங்கள் 10ஆம் நாள் (24.06.2007) ஞாயிற்றுக்கிழமை - இன்று ஞாயிற்றுக்கிழமை 4-வது நாளாக அலங்கார உற்சவம் தொடர முருகன் திருவருள் கைகூடியுள்ளது.

காலை 8.00 மணிக்கு அபிஷேகம்
11.30 மணிக்கு விசேட பூசை
மாலை 4.00மணிக்கு அபிஷேகம்
5.30 மணிக்கு கலை நிகழ்ச்சி
(வியாவில் ஐயனார் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்கள்)
7.00மணிக்கு வசந்த மண்டப பூசை

29.06.2007 வெள்ளிக்கிழமை மாலை 6.00மணிக்கு முருகப்பெருமான் தேருக்கு எழுந்தருளுவார்.

30.06.2007 சனிக்கிழமை மாலை 6.00மணிக்கு தீர்த்தோற்சவம்

உற்சவகுருக்கள்:-சிவஸ்ரீ தெ.சோமசுந்தரக் குருக்கள்

உற்சவ காலங்களில் அடியவர்கள் ஆசாரசீலர்களாக வருகை தந்து எம்பெருமான் திருவருளைப் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

சுபம்

ஆலய பரிபாலன சபையினர்

புகலி சிவசுப்பிரமணிய கோவில்,
காரைநகர்.

(C-177)

# எண்சோதிடம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

அவரும் நான் சிறிது காலம் என்று சொன்னபடி ஆறு மாதகாலம் பிரதமராக இருந்தார். 1979 இல் இலங்கை சென்ற போதும் ஸ்ரீமான் தொண்டமான் அவர்கள் வீட்டிற்கு எனக்களித்த விருந்துக்கு சென்ற போது தன் புதல்வரிடம் நீ எல்லாம் சிறு பிள்ளை 1051ல் 'தஹநாயக்காவை பிரதம மந்திரி ஆவீர் என்று சென்னவர் இவர்தான்' என்று அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சி அவர் மனதில் அவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளது போலும். ஏனெனில் ஸ்ரீராமன் தஹநாயக்கா என்னிடம் நம்பர்களைப் பற்றி விவாதித்த போதும் இதெல்லாம் ஒன்றும் உமக்கு நடக்காது என்றவர் அவர்.

கிறிஸ்தவ சகாப்தம் தொடங்கியதிலிருந்து இந்த 1954 வருஷங்கள் வரை உலகில் நடந்துள்ள போர்கள், அரசாட்சிகளின் ஏற்றம், வீழ்ச்சி, உலக சம்பவங்கள் இவைகளை யெல்லாம் சரியாகத்தான் நடந்திருக்கிறதா என்பதை கவனித்து அதன்பின் பூரண மனதிருப்தியுடன் வெளியிட்ட நூல் அதிஷ்ட விஞ்ஞானம்.

'கண்ணீரால் வியர்வையால் வளர்த்தோம் இப்பயிரை ரத்தம் சிந்திப் பெற்றோம் இந்த சுதந்திரத்தை' என்று பல நாடுகளிலும் கூறுகிறார்கள் அதுபோல் இந்த ஆராய்ச்சியையே என் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு தினமும் 3 மணி நேரமே தூங்கி 1942 முதல் இன்றுவரை நான் வளர்த்த பயிர் இந்தக் கலை. இதை மற்றவர்கள் மாசுபடுத்தவோ ஜனங்களைக் குழப்பவோ செய்தால் பின்வரும் சந்ததிகள் குழப்படைவர். இதை வாசகர்கள் உணர்ந்தால் நலம்.

*சில எண்கள்*

இந் நூலில் கூறியுள்ள பலன்கள் எல்லா தேசங்களுக்கும் எல்லாக் காலங்களிலும் பொருந்தும். உலகிலேயே மிகப் பெரிய அந்தஸ்தை அளிக்கவல்லதாக 46 எண்ணை குறித்துள்ளேன். இந்தோனேஷிய தலைநகரான ஜகார்த்தாவில் மிகச் சிறந்த அமெரிக்க பள்ளிக் கூடத்தில் (மாணவர்கள் செலுத்தும் வருஷ சம்பளம் சுமார் 30 ஆயிரம் ரூபாய். வாத்தியார்கள் சம்பளம் 50 ஆயிரத்திற்கு மேல் மாத சம்பளம்) அங்கு இந்த சாஸ்திரத்தைப் பற்றிப் பேச அழைக்கப்பட்டேன். அப்பொழுது உலகிலேயே மிக்க மேன்மையான நிலையெய்தியவர்களின் எண் 46 என்று சொல்லி அவர்கள் புரிந்து கொள்ளும் உதாரணங்களாக Joseph Stalin, Albert Einstein, Charlie Chaplin என்று யாவரும் ஒப்புக் கொள்ளக் கூடிய பெயர்களை கரும் பலகையில் எழுதி விட்டு இவர்களையெல்லாம் விட புகழ்மிக்க இன்னும் ஆயிரம் வருஷங்களுக்குப் பின்னும் எல்லா நாடுகளிலும் பள்ளிக் கூடப் புத்தகங்களில் வரக்கூடியது யாருடைய பெயர்? தற்சமயம் நம் காலத்தில் வாழ்ந்து வரும் ஆண் மகன் என்று கேட்ட தற்கு சில நிமிஷங்களுக்குச் சரியான பதில் வரவில்லை. பிறகு நான் Neil J.Armstrong, 46 எண்ணுடைய அமெரிக்கர். முதல் முதலில் சந்திரனில் இறங்கிய மனிதர் யார் என்ற கேள்வி என்றும் பள்ளிக்கூட புத்தகத்தில் இடம்பெறும் என்று பலத்த கரவொலிக்கிடையே முடித்தேன். ஆனாலும் 46 எண் எல்லோரும் வைத்துக் கொண்டால் இம்மாதிரி பலன் வராது. அது பொருந்த வேண்டும் 9 எண்காரருக்கு 46 இருதய நோயை உண்டு பண்ணும்.

37 மிகச் சிறந்த போக போக்யங்களைத் தரவல்லது. அநேக மதன காமராஜன்களை இந்த எண்ணில் காணலாம். ஆனாலும் இது 9, 18, 27 பிறந்தவர்களை உஷ்ணத்தை கண்களிலேயே தேக்கி குருடாக்கிவிடும். 9, 27 திகதிகளில் பிறந்தவர்களுக்கு 45 எண்ணுடைய பெயர் நன்மையே தரும். ஆனால் 18ந் திகதி பிறந்தவருக்கு 44, 45 இந்த எண்கள் குஷ்ட ரோகத்தை உண்டு பண்ணும். (கொடூரமும் அதிக திமிரும் ஏற்பட்டு ரத்தம் முறிவதால் தான் குஷ்டரோகம் உண்டாகிறது) அதிக குடிப்பழக்கத்தால் குடல் வெடித்து இறந்தவர்கள் வெகு சிலரையே நான் அறிவேன்.

சுமார்30 வருஷங்களுக்கு முன்பே இவர் நிச்சயம் வயிறு வெடித்து மாண்டு போவார். எனக் கூறப்பட்டவர்கள் இன்றும் நன்கு உயிருடன் இருக்கின்றனர். ஆனால் அசூயை, பொறாமை நிறைந்த பலர் பித்தப்பை வெடித்து இரத்தம் கக்கி மாண்டிருக்கின்றனர். 'பொறாமை வயிறு வெடித்துப் போகிறான் வயிற்றெரிச்சல் தாங்கவில்லை' முதலியவை முற்றிலும் உண்மையே. எல்லா பெரிய தொழில் அதிபர்களும் தனக்கு நீரிழிவோ, இருதயக் கோளாறோ வந்தது ஸ்ட்ரைக் நடந்தபோது, கலவரம் ஏற்பட்டபோது என்று தான் சொல்கிறார்கள் பெரும்பாலான பெரிய வியாதிகளுக்கெல்லாம் மன உளைச்சல், உணர்சிகளின் பாதிப்புதான் காரணமாக உள்ளது.

பொதுவாக 6 எண்ணில் பிறந்தவர்களுக்கு 6 எண் நாட்கள் மிக்க அதிர்ஷ்டமானவை. ஆனால் 6 எண் நாளில் கண் சிகிச்சை ஏதாவது செய்தால் நிச்சயம் ஒரு கண்ணாவது போய்விடும். காரணம் 6 எண் குறிக்கும் சுக்கிரன் 'ஒற்றைக் கண்ணன்' என்பது தான். இந்த மாதிரி சிகிச்சை முதலியவைகளுக்கு பொதுவிதிகள் போதுமானவை அல்ல.

தத்துவதரிசனம் ஆழ்ந்த சோதிட ஞானமும் இருந்தாலன்றி விபரீதங்கள் நிகழக் கூடும். 2 எண் சந்திரனைக் குறிக்கும். நீர் அதிகரிக்கும் கறி காய்கள் பயிர் செய்தால் அதிக நீரை உட்கொண்டு கத்திரிக்காய் கூட தேங்காய் பருமன் வரும். ஆனால் 2 எண் நாளில் ஆபரேஷன் செய்து கொண்டால் சீழும் ஜலமும் வெகுநாட்கள் வந்துகொண்டே இருக்கும். சுலபத்தில் ஆறாது. கண் சிகிச்சை 9 எண்காரர்களைத் தவிர மற்றெல்லோரும் 1 எண் நாட்களில் செய்து கொள்ளலாம். 9 எண் காரர்கள் 9,5 நாட்களில் செய்ய நலம். 9 எண்ணுடையவர் 2 எண் நாளில் சிகிச்சை செய்தால் ஜலம் வடிந்து கொண்டே இருந்து கண் அழுகி விடும்.

நான் 2.10.1985 அன்று காடராக்ட் (பூவி முதல்) ஆபரேஷன் செய்து கொள்ளவேண்டும். டாக்டர் கெட்டிக்காரரானாலும் நீரைக் கக்கியே கண் போய்விடும் எனக் கூறியும் தைரியமாக அத்திகதியில் சிகிச்சை செய்து கொண்டு கண்ணை இழந்தார். என் நண்பரின் கூட்டாளி. கண்ணைப் பிடுங்கி விட்டு அழகான பொய்க்கண்ணை பொருத்திக் கொண்டுள்ளார். இதுபோல் 3 எண்ணுக்கு 6 நாட்கள் 6-க்கு 3 நாட்கள் 7-க்கு 7, 8 நாட்கள் 1,2,4,7,8 எண்காரர்கள் எல்லோருக்கும் 8 வரும் நாட்கள் தீமையே விளைவிக்கும் சரீரத்திலுள்ள அங்கங்கள் எந்த எண் ஆதிக்கத்திற்குட்டவை என்று அறிந்து அதற்கேற்றபடி செயல்பட வேண்டும்.

பலவகையான வலிப்பு நோய்கள் பிறந்த திகதி 6 ,15,24 ஆக இல்லாவிடில் பெயரை 41 எண்ணுடையதாக்கி எழுதி வந்தால் நோய் அறவே நீங்கும்.6 ,15,24 திகதியோ அல்லது கூட்டு எண் 6 ஆகவோ இருந்தால் 42 வைக்கலாம். நன்மையே தரும். இந்நோய் அஜீரணத்தால் அதிகரிக்குமாதலால் 33 போன்ற ஜீரண சக்தியைக் குறைக்கும் எண்ணுக்கு மாற்றக்கூடாது.

பார்க்கின்ஸன் வியாதி என்ற வைத்தியம் வெற்றியளிக்காத நோய் தொடர்ந்த மலச் சிக்கலால் குடல் இயக்கம் கெட்டு நரம்பு முனைகளுக்கு இரத்த ஓட்டம் ஏற்படாததால் (கைகள், கால்கள் உதறும்) இந்த நோயை 5 எண் குணப்படுத்தாது 1 அல்லது 9ல் எது பிறந்த எண்ணுக்கு சாதகமானதோ அதை அமைக்க குணமாகும்.

**பண்டிட் ஸேதுராமன்**

ஆஸ்த்மா என்று தற்காலத்தில் எல்லாவிதமான மூச்சுத்திணறல், இழுப்புகளையும் வர்ணிக்கிறார்கள். இதில் நூற்றுக்கு 4 சத விகிதம் கூட நிஜயமான ஆஸ்த்மா அல்ல. கைவிரல்களில் முதல் அங்குலாஸ்தியில் (நகம் உள்ள பாகம்) கட்டமிட்டது போல் குறுக்கு நெடுக்காக கோடுகள் இருந்தால்தான் ஒரிஜினல் ஆஸ்த்மா. மற்றவை சூழ்நிலை தறிகள் நெய்யுமிடத்து வாழ்தல், பஞ்சு, சிமெண்ட் மற்ற காற்றின் அசுத்தத்தால் உண்டானவையே. இம்மாதிரி கூறிக்கொண்டே போனால் நான் சொன்ன இரண்டாயிரம் பக்க நூலாகிவிடும்.


எதற்கு இவ்வளவு தூரம் சொன்னேன் என்றால் அதிர்ஷ்ட விஞ்ஞானம் படித்ததுமே முழு சாஸ்திரமும் தெரிந்ததாக பலர் நினைத்திருப்பதை பெருந்தவறு என்று உணர்த்தவே.

என்னை நேரில் சந்திக்க முடியாதவர்களும் அவர்கள் வீட்டிலுள்ளவர்கள் யாருடைய பெயராக இருந்தாலும் 16 ,17, 26, 29, 31, 35, 38, 44, 47 என்பதுபோல் தீமை தருவனவாக இருந்தால் பிறந்த திகதிக்கேற்ற புத்தகத்தில் நன்மையுானது என அறிவிக்கப்பட்டுள்ள எதற்காவது மாற்றிக் கொள்ளலாம் .நீங்கள் என்ன தப்பாக மாற்றி னாலும் இதைவிடத் தீமை விளையாது. *(தொடரும்)*

# அட்லாண்டிஸ் விண்கலம் கலிபோர்னியாவில் வெற்றிகரமாகத் தரை இறங்கியது

(கலிபோர்னியா)

பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய அட்லாண்டிஸ் விண்கலம் வெற்றிகரமாக கலிபோர்னியாவில் உள்ள விமானத் தளத்தில் தரைஇறங்கியது . கடும் மழை பெய்யும் போதும் வேகமாக காற்று வீசும் போதும் தரை இறங்கினால் வெப்ப தடுப்பு தகடுகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தால் அட்லாண்டிஸ் விண்கலம் தரையிறங்குவது ஒரு நாள் ஒத்திவைக்கப்பட்டது.



அட்லாண்டிஸ் புறப்பட்டுச் சென்ற காட்சி.

விண்ணில் சுற்றி வரும் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துடனான இணைப்பை துண்டித்துக் கொண்டு கடந்த 19ஆம் திகதி அட்லாண்டிஸ் விண்கலம் பூமிக்கு புறப்பட்டது. திட்டமிட்டபடி 21ஆம் திகதி பூமியில் அது தரையிறங்கி இருக்க வேண்டும்.

அமெரிக்காவில் புளோரிடா மாகாணத்தில் கேப் கெனவெரல் என்ற இடத்தில் உள்ள கென்னடி விண்வெளி ஆய்வு மையத்தில் விண்கலம் தரையிறங்க அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆனால் கென்னடி ஆய்வு மையப் பகுதியில் வானிலை மிக மோசமாக இருந்ததால்



வெற்றிகரமாக அட்லாண்டிஸ் தரையிறங்கும் காட்சி.

விண்கலம் தரை இறங்குவது இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்டது.

விண்கலம் தரை இறங்கும் போது ஆய்வு மையத்தை ஒட்டி 55 கி.மீ சுற்றளவுக்கு மழை இருக்கக்கூடாது. மழை மேகங்கள் சூழ்ந்து இருந்தாலும் அந்த மேகங்கள் எட்டாயிரம் அடி உயரத்தில் இருக்கவேண்டும். காற்றின் வேகம் அதிகமாக இருக்கக்கூடாது என்று நாசா சில விதிமுறைகளை வகுத்துள்ளது.

கடும் மழை பெய்யும் போது விண்கலம் தரை இறங்கினால் அதன் மேற்புறத்தில் ஒட்டப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான வெப்ப தடுப்பு தகடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுவிடும். அந்த விண்கலத்தை மீண்டும் பயன்படுத்துவதில் சிக்கல் உருவாகிவிடும். இதன் காரணமாகவே கடந்த 21ஆம் திகதி நாசா விண்கலம் தரை இறங்கவில்லை.

இதை தொடர்ந்து கென்னடி ஆய்வு மையத்திலேயே இலங்கை நேரப்படி வெள்ளிக்கிழமை இரவு 10.44 மணிக்கு விண்கலத்தை தரையிறக்கச் செய்யவேண்டும் என்று நாசா விஞ்ஞானிகள் திட்டமிட்டிருந்தனர். இங்கும் காலநிலை ஒத்துவராததால் தரையிறக்கம் ரத்து செய்யப்பட்டது. தொடர்ந்து வானிலை சீரடையவில்லை. எனவே கலிபோர்னியா மகாணத்திலுள்ள எட்வர்டு விமானப்படைத் தளத்தில் தரையிறக்க முடிவு செய்யப்பட்டது. இதன் படி இலங்கை நேரப்படி சனிக்கிழமை அதிகாலை 1.19 மணிக்கு வெற்றிகரமாக தரையிறங்கியது. (அ-5)

# குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் குடிநீர் விநியோகத் திட்டத்தின் பராமரிப்புச் செலவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

அச்செலவை ஈடுசெய்யும் பொருட்டு மக்களின் பங்களிப்புடன் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் ஓர் அங்கமாக பொது நீர்க்கம்பங்களின் ஊடாக குடிநீரைப் பெறுபவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட பாவனையாளர் சங்கங்களை ஸ்தாபித்து அச்சங்கங்களின் முழுமையான ஒத்துழைப்புடன் அக் கம்பங்களின் ஊடாகக் குடிநீரைப் பெறுகின்ற ஒரு குடும்பத்திற்கு நாளொன்றிற்கு ஒரு ரூபா வீதம் மாதாந்தம் 30 ரூபா சேகரித்து ஒவ்வொரு சங்கங்களினதும் கண்காணிப்பாளர்கள் மாநகர சபையில் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார். (சு)



முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர் அமரர் இரத்தினம் விஜயரத்தினத்தின் காப்புறுதிக் கொடுப் பனவுக்கான காசோலையினை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ். பிராந்திய முகாமையா ளர் திருமதி R.F.அரியநாயகத்திடமிருந்து திருமதி பரமேஸ்வரி விஜயரத்தினம் பெற்றுக் கொள்வதனைப் படத்தில் காணலாம்.

அருகில் நெல்லியடிக் கிளை விற்பனை முகாமையாளர் கு.ஆறுமுகன்,கிளையின் நிர்வாக உத்தியோகத்தர் சி.வசந்தி , கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட நிதியியல் ஆலோசகர் எஸ். என்.கதிர்வேலு மற்றும் உத்தியோகத்தர் சு. திலீபன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# இன்று ஒரு தகவல்

## வயலின் வந்த கதை

ஒரு சங்கீத வித்துவான் தனது சீடர்களுடன் பல்லக்கிலே போய்க்கொண்டிருந்தார்.

அப்பொழுது ஒரு கொள்ளைக்கூட்டம் எதிரே வந்து வழி மறித்தது.

பல்லக்கிலே இருந்த நகை , பணம் , உணவுப்பொருட்கள் எல்லாவற்றையும் கொள்ளையடித்தார்கள்.

அந்த வித்துவான் கையிலே ஒரு பெட்டி வைத்திருந்தார். அதையும் எடுக்க வந்தார்கள்.

"ஐயா இந்தப் பெட்டியை மட்டும் எடுக்க வேண்டாம் ..வேறு எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். இது மட்டும் என்னிடம் இருக்கட்டும்" என்றார் வித்துவான்.

இவர் இப்படிச் சொன்னது கொள்ளைக் கூட்டத் தலைவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"அப்படி... அந்தப் பெட்டியிலே என்னதான் இருக்கிறது" என்று கேட்டான்.

"நான் என்னுடைய பிள்ளை மாதிரிப் பாவித்து வரும் வாத்தியம் ஒன்று வைத்திருக்கிறேன். அதைத்தவிர உங்களுக்கு உபயோகமானது எதுவும் பெட்டிக்குள் இல்லை" என்றார். "அது சரி... அந்த வாத்தியக் கருவி உன் பிள்ளை மாதிரி என்று சொல்கிறீரே... அப்படியானால் அது உன்னிடம் பேசுமா?" என்று கேட்டான் கொள்ளையர் தலைவன்.

"ஆமாம் ! அதை எல்லோருடனும் பேசவும் வைக்கலாம், பாடவும் வைக்கலாம்..." என்றார். "அப்படியென்றால் என் பெயரைச் சொல்லி அதைக்கூப்பிட வைபார்க்கலாம்" என்றான் அவன்.

வித்துவான் பெட்டியைத் திறந்தார். உள்ளே இருந்த இசைக் கருவியை வெளியே எடுத்தார்.

ஒவ்வொருவருடைய பெயரையும் கேட்டார் .அதையெல்லாம் அப்படி அப்படியே வாசித்துக்காட்டினார். அதைக் கேட்டதும் அவர்களுக்கு ஆச்சரியமாய் போச்சு.

எங்கே இதைப் பாடச் சொல்லு பார்க்கலாம் என்றான் கூட்டத்தில் ஒருவன். உடனே அந்த வித்துவான் சில நாட்டுப் பாடல்கள், மீனவர் பாடல்கள் எல்லாவற்றையும் வாசித்துக் காட்டினார்.

கொள்ளைக் கூட்டம் ரொம்பவும் ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் அதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தது. ஒருத்தன் கேட்டான். "இதை மட்டும் கொடுக்கமாட்டேன் என்கிறாயே. இதை வைத்துக் கொண்டு என்ன செய்வாய்... இது உனக்குச் சோறு போடுமா?" என்றான்.

"ஆமாம் இது சோறு போடும். துணிமணிகளும் கொடுக்கும். மன்னர் முன்னால் இதை வாசித்துக் காட்டினால் எல்லாச் செல்வங்களும் கிடைக்கும் .இப்பொழுது நீங்கள் எடுத்துக் கொண்ட பொருட்கள் எல்லாம் ஒரு மன்னர் கொடுத்தது தான்"

கொள்ளையர் தலைவன் யோசிக்க ஆரம்பித்தான். தன்னுடைய தோழர்களோடு ஆலோசனை செய்தான். இவர் நமக்காக இதை வாசித்திருக்கிறார். இவருக்கு நாங்கள் ஏதாவது சன்மானம் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தான்.

கொள்ளையடித்த பொருட்களையெல்லாம் திருப்பிக் கொடுத்தான். அத்துடன் தங்களிடமிருந்த காய், கனிகள், வனப் பொருட்கள் எல்லாவற்றையும் வாரி வழங்கினான்.

அதுமட்டுமன்றி அவர்கள் போய்ச் சேர வேண்டிய இடம் வரை கூடவே பாதுகாப்பாகச் சென்றானாம்! இது நம்ம ஊரிலே ஒரு 150 வருஷங்களுக்கு முன்னாடி நடந்த ஒரு சம்பவம். அந்தச் சங்கீத வித்துவான் பெயர் வடிவேலு.

அவர் வைத்திருந்த வ்ாத்தியக் கருவி பிடில். அதாவது வயலின்! பிடில் ஒரு மேல்நாட்டு இசைக்கருவி. அதை முதல் தடவையாக கர்நாடக சங்கீதத்திலே புகுத்தியவர் இந்த வடிவேலு. ஆங்கிலேயர்கள் இந்த பிடிலை 'பாலேயில்' (Battet) பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதை ரொம்ப சிரமத்தோடு கர்நாடக இசை ஸ்வரங்கள் அதிலே வாசிக்க வருமா என்று பார்த்து அதிலே கர்நாடக இசையை முதலிலே வாசித்துக் காட்டியவர் முத்துசுவாமி தீட்சிதரின் தம்பி பாலு தீட்சிதர்.

முத்துசுவாமி தீட்சிதரின் சீடர்தான் வடிவேலு. தஞ்சாவூர் மகாராஜாவின் சங்கீதவித்துவச் சபையிலே வடிவேலுவையும் ஒரு முக்கிய வித்துவானாகச் சேர்த்துக் கொண்டார். அப்பொழுது அவருக்கு வயது பதினாறு தான்!

அந்த சமயத்திலே இருந்த கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் வடிவேலுவிடம் தன்னுடைய பிடில் வாத்தியத்தைக் கொடுத்து அதை வாசிப்பதற்கு கற்றுக்கொடுத்தார்.

அவர் கற்றுக் கொடுத்தது மேல்நாட்டுச் சங்கீதம். இவர் அதை வைத்துக் கொண்டு இரண்டு வருட காலம் இடைவிடாமல் சாதகம் பண்ணி கர்நாடக சங்கீதத்தை வாசிக்கக் கற்றுக் கொண்டார்.

தஞ்சை அரச சபையிலே கர்நாடக இசை மேடையிலே பிடில் வாத்தியம் அரங்கேறியது. வடிவேலுவுக்கு சகல சன்மானங்களும் கிடைத்தது. ஆக வயலின் வரவுக்கு வடிவேல் ஒரு முக்கிய காரணம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இன்று வயலின் எல்லார் கைகளிலும் இருக்கிறது. என்னுடை நண்பர் ஒருவர் அவருக்குக் சங்கீதம் என்றால் என்னவென்றே தெரியாது. அவர் சொன்னார்

இன்று சபாவிலே என்னுடைய வயலின் கச்சேரி ... எக்கச்சக்கமான பாராட்டு என்றார் "வயலின் வாசித்ததற்காக" என்றேன். "இல்லை; வாசித்து முடித்ததற்கு" என்றார் அவர்.

தென்கச்சி கோ.சுவ்ாமிநாதன்

## வருடாந்த விளையாட்டு விழா-2007

வலி.மேற்கு பிரதேச சபை, வட்டுக் கோட்டை,கஜமுகன் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30மணியளவில், வட்டு.மத்திய கல்லூரி அருகாமையில் அமைந்துள்ள வலி.மேற்கு பிரதேசசபை மைதானத்தில், பெற்றோர் ஆசிரியர் சங்க அங்கத்தவரான திருமதி நா.குகதாசன், முன்பள்ளி பொறுப்பாசிரியர் திருமதி தி.செல்வராசா ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சுழிபுரம், வலி.மேற்கு பிரதேசசபை செயலாளர் இ.இராச துரை பிரதம விருந்தினராகவும், வலிகாம வலய ஆரம்பப்பிள்ளை பருவக் கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகநேயன் கௌரவ விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக வட்டு. உப அலுவலகப் பொறுப்பதிகாரி க.ஸ்கந்தராசா, யா/ வட்டு. மத்திய கல்லூரி அதிபர் ந.சபாரத்தினசிங்கி,வட்டு. தென் மேற்கு கிராம உத்தியோகத்தர் கோ.விஜயவேல், சனசமூக அபிவிருத்தி சமாசத் தலைவர் தி.உதயசூரியன்,வட்டு. தென் மேற்கு குடும்பநல உத்தியோகத்தர் T.துஷியந்தி, சங்கானை பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் நா.நிரஞ்சனா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

## கலந்துரையாடல்

கொழும்பிலிருந்து கப்பலில் பொருட்கள் கொண்டுவரும் வர்த்தக உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் நாளை மாலை 1.30 மணிக்கு யாழ் . வணிகர் கழக பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் வர்த்தக உரிமையாளர்கள், உரிமையாளர்கள் யாழ்ப்பாணத்தில் இல்லாதவிடத்து தகுதி வாய்ந்த பொறுப்பாளர்கள் கட்டாயமாகக் கலந்துகொள்ளவேண்டுமென யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ)

## இராசிபலன்

*24.06.2007*
*(ஆனி 10, ஞாயிற்றுக்கிழமை)*
*நவமி முற்பகல் 11.40 மணிவரை*
*சித்திரை முழுவதும்*
*இராகுகாலம் 4.25- 5.55 மணிவரை*
*சுபநேரம் 08.55-10.25மணிவரை*

**மேடம்:-** சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய நன்மை, தெய்வ சிந்தை, போசன சுகம்.

**இடபம்:-** ஆரோக்கியம், விருந்து பசாரம், உறவினர் சந்திப்பு, முயற்சி கைகூடும்.

**மிதுனம்:-** பணக்குறைவு, உடல் நலக் குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், தாழ்ந்த சுபாவம்.

**கடகம்:-** வாகன சுகம், சுபசெலவு, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி தாமதம்.

**சிங்கம்:-** நல்ல முயற்சி, உறவினர் உதவி, கீர்த்தி, விருந்து பசாரம்.

**கன்னி:-** மனோ சங்கடம், அதிகசெலவு, முயற்சி தாமதம், ரோக நிலை.

**துலாம்:-** வெகுமானம், புதிய முயற்சி, போசன நன்மை, தெய்வ சிந்தை.

**விருச்சிகம்:-** மனஸ்தாபம் , எடுத்த கருமங் கள் தாமதமாகும், பிறருக்கு உதவுதல், சயனசுகக் குறைவு.

**தனுசு:-** சயன சுகம், தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும்.

**மகரம்:-** இனசனத்தொடர்பு, காரிய சித்தி, தெய்வசிந்தை, நல்ல செய்தி.

**கும்பம்:-** கட்டுப்பாடு, ஆழ்ந்த சிந்தை, பிரயாணம், சரீரப்பிர யாசை.

**மீனம்:-** பொருள் விரயம், வீண் செலவு, காரிய தடங்கல் , போசன சுகம்.

-வளவன்

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

**ஒன்பதாம் திருவிழா**

### பராபரை நாகபூசணி

பெற்றதா லன்னை பெறுமுயி ரனைத்தும்
பேணலா லன்னை பெற்றிடுவோர்
உற்றதா லன்னை விரும்பிய வனைத்தும்
உதவலா லன்னை யெக்கலையுஞ்
சொற்றதா லன்னை யுலகொடு வானுந்
தொழுதலா லன்னை யென்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலா லன்னை
பராபரை நாக பூடணியால்

நயினை வரகவி க.நாகமணிப் புலவர்

### நாகம் பூசித்த நயினைப்பதியாள்

நாகம் பூசித்த நயினைப் பதியாள்
நாடும் வரமீய்ந்து எம்மைக் காப்பவள்
பாகம் சிவனிடம் பெற்ற தாயவள்
பணிவார் மனங்களில் குடியிருப்பவள்
மோதும் கடலலை மீதமர்ந்தவள்
முத்தம் வந்தோரின் நலனைக் காப்பவள்
வேதபூசணி யாகி வித்தை தருபவள்
வெற்றி தந்தெமை தினமும் ஆள்பவள்

மகாகவி சாகரம்-காரை எம்.பி.அருளானந்தன்

### விந்தைகள் புரியும் தாயே

விந்தைகள் புரியும் தாயே
கண்கண்ட தெய்வம் நீயே
கருணையின் வடிவம் நீயே
எண்ணிடும் போதில் எல்லாம்
எமதுள் உறைவாய் நீயே
விண்ணிலே வீற்றி ருந்து
விந்தைகள் புரியும் தாயே
மண்ணிலே வாழும் எம்மை
மகிழ்வுடன் காப்பாய் தாயே

சிந்துபுரக்கவிராயர்

### சந்தோஷ வாழ்வு வேண்டும் தாயே

நயினை நாகபூசணி அம்மையே
எமக்கு நல்வரம் தரவேண்டும் தாயே
வினைகள் அகலவேண்டும் மாதர்க்கு அரசியே
ஐக்கியமாய் வாழவேண்டும் தம்பிரான் துணைவியே
அலைகள் கைகூப்பி வணங்கும் சமுத்திரம்
நடுவில் அமர்ந்திருக்கும் தெய்வ ரத்தினம்
குடை பிடிக்கும் அரவத்தில் சங்கு சக்கரம்
எம் குலம் நடுங்க வைக்குதம்மா இந்த கலியுகம்

S. தாஸ், காரையூர்

### நயினை நாகபூசணியம்மன் பாமாலை

நயினை யம்பதி வளர் நாக பூசணித் தாயே
எம் நலம் காக்க ஓடி வருவாய் நீயே
பாரினில் நாம் படும்துயரம் பாட்டினிலே கேட்டிடம்மா
பாவியர் சுமை தணிந்திடவே பார்வை மழை பொழியனம்மா
சொந்த மண்ணில் வந்ததாயே இங்கு சோதனைகள் பலவம்மா
வந்து துயர் தீர்த்திடவே வடிவழகி வந்திடம்மா
கட்டையிலே போகும் உயிர் கனிந்து விடை கேட்குதம்மா
உன் கடைக்கண் விழியதனை வீசி எமைக் காத்திடம்மா

மல்லை கலா

### துயரை போக்கிடு

நயினை யம் பதியினிலே பெரும் ஆழியின்
மத்தியிலே அமர்ந்தவளே
என் தாயே நாக பூசணியே
நாடி வரும் அடியார்களுக்கு நல்லவரம்
கொடுத்தருளியவள் நீயே தாயே
அகில மெல்லாம் பூத்தவளே பூங்காரி
வாடி மனம் வருந்தி வண்ணமுகம்
காண ஓடி உன்பாதம் பணிந்தேன் தாயே
சரண் புகுந்து சங்கரியே தூயவரம்
தந்து துன்புறும் துயரை போக்கிடு
என் தாயே நயினை நாகபூசணி

செல்வராஜா இளங்கோ.
அரசடி நல்லூர்

கெட்ட செய்திகளுக்கு இறக்கை உண்டு. நல்ல செய்திகளுக்கு கால்கள் கூடக் கிடையாது.

-அப்துர் ரஹீம்

வலம்புரி

## ஆபத்து நிறைந்ததாகவுள்ள யாழ்ப்பாணத்து ஊடகப் பணி

இலங்கையில் ஊடகப் பணி என்பது மிகவும் ஆபத்தானதாக மாறியுள்ளது. அதிலும் யாழ்ப்பாணத்தில் ஊடகப் பணி மிகப் பெரும் ஆபத்து நிறைந்தது என்பதை சர்வதேச ஊடக அமைப்புக்கள் நூறு வீதம் ஏற்றுக் கொண்டுள்ளன.

போர்ச் சூழல் நிறைந்த யாழ்ப்பாணத்தில் பத்திரிகைப் பணி பயங்கரமானதாக, ஆபத்து நிறைந்ததாக இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ள போதிலும்,

ஊடகவியலாளர்களிடையே இருக்கக் கூடிய ஒற்றுமையீனம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் அனைவரும் ஒருமித்து ஒன்றுபட்டு நிற்பார்களேயானால் பத்திரிகையாளர்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்களை - எதிர்ப்புக்களை ஓரளவேனும் முறியடிக்க முடியும்.

எனினும் அத்தகையதோர் ஒற்றுமை மனப்பாங்கு ஊடகவியலாளர்களிடம் இல்லாமை மிகப் பெரும் துரதிஷ்டமாகும்.

தமக்கு விருப்பமான - அறிமுகமான ஊடகவியலாளர்கள் பாதிக்கப்படும் போது மட்டும் குரல் கொடுப்பது, கொடிபிடிப்பது, அறிக்கை விடுவது என்ற குறுகிய மனப்பாங்குக் கலாசாரத்தில் ஊடக அமைப்புக்கள் மூழ்கிக் கிடப்பது ஊடகத் துறைக்கு ஏற்பட்ட அபசகுனமாகும்.

அதேநேரம் யாழ்ப்பாணத்துப் போர்ச் சூழலைச் சாதகமாகப் பயன்படுத்தி சில ஊடகவியலாளர்கள் சுய லாபத்துடன் செயற்படுவதும், நிதியுதவிகளைப் பெறுவதும் எம்மை நாமே காட்டிக் கொடுக்கும் காரியமாகும்.

சில ஊடக அமைப்புகளுக்குச் சிறிய நிதியுதவிகளை வழங்கும் தென்னிலங்கை ஊடக அமைப்புக்கள் அவற்றை மிகப் பெரும் பிரசாரமாக தென்னிலங்கை முதல் சர்வதேசம் வரை மேற்கொள்கின்றன.

யாழ்.குடாநாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் முழுத்தேவைகளையும் தாம் நிறைவு செய்துள்ளதாக அவற்றின் அறிக்கைகள் அமைந்துள்ளன.

இத்தகைய அறிக்கைகளை சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கையளித்துப் பெருந்தொகையான நிதியுதவிகளை பெறும் தென்னிலங் கை ஊடக அமைப்புக்கள் குறித்து யாழ்ப்பாணத்து ஊடகவியலாளர்களும் ஊடக அமைப்புக்களும் விழிப்பாக இருக்க வேண்டிய அவசியமுள்ளது.

அதேசமயம் சில ஊடகங்கள், தமது விற்பனைக்கும் இருப்புக்குமான பிரசார உத்தியாக தற்காலப் போர்ச் சூழலைக் கையாளும் அநாகரியத்தையும் காண முடிகின்றது.

விசாரணைகள், விளக்கங்கள், உயர் மட்ட அரசியல் தொடர்புகள் என்றவாறு முன்னெடுக்கப்படும் பிரசார உத்திக்குள் ஆளும் தரப்புகளும் அவற்றினால் அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுக்களும் அகப்பட்டுக் கொண்டுள்ளனவா?

அல்லது ஊடகவியலாளர்களுக்கான ஆபத்துத் தொடர்பில் உடனடி விசாரணை செய்வதன் மூலமாக சர்வதேச ரீதியில் அரசின் நேர்மையை வெளிக்காட்ட முற்படுகின்றனவா? என்பது தெரியாத - புரியாத விடயமாகவுள்ளது.

எதுவாயினும் ஊடகவியலாளர்கள் அனைவரினதும் உயிருக்குப் பாதுகாப்பும், உத்தரவாதமும் கட்டாயமானது.

அவர்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கும் செய்தி சேகரிப்புக்கும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். விசாரணைகள், விளக்கங்கள் நேர்மைத் தன்மையாக இருக்க வேண்டும்.

வெறும் புகைப்படங்களுடனும் குறூப் போட்டோக்களுடனும் விசாரணைக் குழுக்களின் பணி முடிபடைந்து விடுவதுமில்லை. அதனால் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுமில்லை என்ற உண்மை உணரப்படுவதாகுக.

# தவறுகளை ஏற்றுக் கொண்டு மீண்டும் வந்தால் மங்கள, சிறிபதி இருவரையும் இணைக்கத் தயார்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராட்சி ஆகியோர் தமது தவறுகளை ஏற்றுக் கொண்டு எம்மிடம் வந்தால் அவர்களை வரவேற்பதற்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். கட்சியிலும் அரசாங்கத்திலும் அவர்களுக்கு உரிய இடம் கொடுப்பது பற்றி பரிசீலிக்கவும் தயாராக இருக்கின்றோம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வெற்றி பெற வைத்தது தவறான விடயம் என்று மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். அப்படியானால் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்று அவர் கூறுகின்றாரா? இந்த யுகத்தில் நாம் பெற்ற பாரிய அரசியல் வெற்றியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியைப் பெருமையுடன் குறிப்பிடுகின்றோம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மங்கள சமரவீரவினதோ ஜனாதிபதியினதோ எமதோ சொத்தல்ல. அது மக்களின் சொத்தாகும். எமது கட்சியை பலவீனமடையச் செய்ய சதித்திட்டம் மேற்கொள்ளப்படுகின்ற போதெல்லாம் எமது கட்சி பலமடையும்.

தவறுகள் எங்கும் இடம்பெறலாம். அந்த வகையில் தவறிழைத்துள்ள மங்கள, சிறிபதி சூரியாராட்சி ஆகியோர் தவறுகளை ஏற்றுக் கொண்டு மீண்டும் அரசாங்கத்துடன் இணைய வந்தால் அவர்களை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

கட்சியின் ஒழுக்காற்று ஒழுங்கு விதிகளின்படி அவர்களை மீண்டும் ஏற்றுக் கொள்வது பற்றி பரிசீலிக்கலாம். அவர்கள் இருவரும் மீண்டும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

1994 ஆம் ஆண்டிலிருந்து இந்த நாட்டை ஆட்சி செய்து வருகின்றோம். அந்த வகையில் இடையில் 2002 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை ஐக்கிய தேசியக் கட்சி நாட்டை ஆட்சி செய்தது. அதன்போது அமைச்சரவைக்கும் தெரியாமல் அப்போதைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்க போர்நிறுத்த உடன்படிக்கையை உருவாக்கினார்.

இதனால் புலிகள் வட-கிழக்கில் பாரியளவில் பலமடைந்துள்ளனர். ஆயுதங்களைக் கொள்வனவு செய்தனர். முக்கியமான புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்களை நாங்கள் இழந்தோம். மங்களவினதும் சிறிபதியினதும் சவால் புஷ்வாணமானதாகும் என்பதை கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

சில அரசியல்வாதிகள் சில தீர்க்கதரினமற்ற தீர்மானங்களை மேற்கொள்வதன் மூலம் அரசியல் அநாதைகளாக் ஆகி விடுகின்றனர். அவ்வாறே நாங்கள் மங்களவைப் பார்க்கின்றோம் என்றார். (ச-5)

# மூதூர் படுகொலை வழக்கின் குற்றவாளிகள் கண்டுபிடித்துத் தண்டிக்கப்பட வேண்டும்

## அக்ஷன் பாம் அறிக்கை

(கொழும்பு)

மூதூரில் 17 அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டதில் தொடர்புடைய குற்றவாளிகள் கண்டுபிடித்துத் தண்டிக்கப்பட வேண்டும் என்று அக்ஷன் பாம் நிறுவனம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மூதூரில் அக்ஷன் பாம் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டு 10 மாதங்களாகிவிட்டன.

இது தொடர்பாக கந்தளாய் நீதிமன்றில் கடந்த ஜூன் 6 ஆம் திகதி விசாரணை நடைபெற்றது. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் வேண்டுகோளைத் தொடர்ந்து மேலதிக விசாரணைகள் இடை நிறுத்தப்பட்டன. விசாரணைகளை 3 மாதங்களுக்கு ஒருமுறை நடத்தவும் நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி விசாரணை ஆணையமும் இரகசியமாக விசாரணைகளை நடத்தியது. அக்ஷன் பாம் அமைப்பின் பிரதிநிதியைப் பார்வையாளராக அனுமதிக்கவில்லை. இலங்கையின் அமைப்பு முறையில் உள்ள குறைபாடுகளினால் இந்தப் படுகொலைகள் நடந்த பகுதியிலிருந்து சாட்சியமளிக்க எவரும் முன்வரவில்லை.

சர்வதேச விதிமுறைகளுக்கு அமைய மூதூர் படுகொலை உள்ளிட்ட 16 வழக்குகளின் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று அண்மையில் சர்வதேச வல்லுநர்கள் குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

இலங்கை இனப்பிரச்சினையில் பொதுமக்களும் அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்களுமே முதலில் இலக்காகின்றனர். அண்மையில் இரண்டு செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை இதனையே நினைவூட்டுகின்றது.

மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள எமது செயற்பாடுகள் பாரபட்சமற்றது-நடுநிலையானது-சுயாதீனமானது. மூதூர் படுகொலை வழக்கின் உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# தேசத்தைக் கட்டி எழுப்புவதற்கு கஞ்சாச் செடிகளைப் பயிரிடுங்கள்

## சபையில் ரணில் விக்கிரமசிங்க கிண்டல்

தேசத்தைக் கட்டி எழுப்பவேண்டுமாயின் கஞ்சாச்செடிகளைப் பயிரிடுங்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கிண்டலாகக் கூறி சபையை விட்டு வெளியேறினார்.

நாடாளுமன்றம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்குச் சபாநாயகர் டி.ஜே.மு.லொக்குபண்டார தலைமையில் கூடியபோது வாய் மூலக் கேள்விகளுக்கான விடைக்கான நேரம் முடிபடைந்த பின்னர் விசேட கூற்றுக்கான நேரம் ஒதுக்கப்பட்டது.செவனகல சீனித் தொழிற்சாலை தொடர்பாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் மைக்கல் பெரேரா விசேட கூற்றொன்னை விடுத்து உரையாற்றி முடித்தார்.

இதன்போது எழுந்த எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தேசத்தைக் கட்டி எழுப்ப கஞ்சாச் செடிகளைப் பயிர் செய்யவும் என்று கிண்டலாகக் கூறி சபையை விட்டு உடனடியாக வெளியேறிவிட்டார்.

இதன்போது சபையில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் சிரிபொலி எழுப்பியதுடன் அரசாங்கத் தரப்பிலிருந்த அமைச்சர்கள் மௌனமாக இருந்தனர். (ச-5)

# அரசு சவால் விடாமல் பொதுத் தேர்தலை நடத்திக் காட்ட வேண்டும்-ஐ.தே.க.எம்.பி.

அரசாங்கம் முடியுமானால் விரைவில் பொதுத் தேர்தலை நடாத்திப் பார்க்கட்டும். எமது சவாலை அரசாங்கம் முடியுமானால் ஏற்றுக் கொள்ளட்டும் என்று சவால் விடுகின்றோம். கடந்த சில மாதங்களாக அரசாங்கம் தேர்தலை நடத்த வேண்டும் என்றே நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம்.

மக்கள் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பத் தயாராகி விட்டனர் என்று ஐக்கியதேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சி விரும்பினால் பொதுத் தேர்தலை நடத்த அரசாங்கம் தயார் என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ் விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது; அரசாங்கம் உடனடியாக பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. இந்த அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை.

மாறாக அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மட்டுமே அரசாங்கம் முழுமூச்சுடன் செயற்பட்டு வருகின்றது. மக்கள் வாழ்க்கைச் செலவு உயர்வை தாங்க முடியாமல் திண்டாடுகின்றனர். மக்களால் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியவில்லை. ஆனால் அரசாங்கம் வாழ்க்கைச் செலவு உயர்வைக் கட்டுப்படுத்தவோ அதனைக் குறைக்கவோ நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

அமைச்சர்களோ சுகபோக வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர்.எனவே நாட்டில் தற்போது ஆட்சி மாற்றம் இடம்பெற வேண்டியது அவசியமாகிவிட்டது. மக்கள் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பத் தயாராகி விட்டனர். எனவே அரசாங்கம் உடனடியாகப் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுகின்றோம்.

பொதுத் தேர்தலை நடத்திக் காட்டுவோம் என்று சவால் விடுவது மட்டும் போதுமானதல்ல. மாறாகப் பொதுத் தேர்தலை உண்மையிலேயே நடத்திக் காட்ட வேண்டும். அல்லது அரசாங்க அதிகாரத்தை எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். நாட்டைக் கட்டிஎழுப்ப நாங்கள் தயாராகவேயிருக்கின்றோம். இந்த நாட்டை ஐக்கியதேசியக் கட்சியினால் மட்டுமே கட்டி எழுப்ப முடியும். எனவே பொதுத் தேர்தல் கட்டாயம் இடம்பெற வேண்டும். (ச-5)

# பொதுமக்களை பாதுகாப்பது குறித்து ஐ.நா.பாதுகாப்புச் சபை கூடி ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையில் இடம் பெற்று வரும் மோதல்களில் அப்பாவி மக்களை பாதுகாப்பது குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை நேற்று முன்தினம் மூடிய அறைக்குள் கலந்துரையாடல் நடத்தியுள்ளது.

பொதுமக்கள் மீது தாக்குதல் நடாத்தப்படும் செயலானது சர்வதேச மனித நேயச் சட்டத்தை மீறியது என்று சுட்டிக்காட்டியுள்ள ஐக்கிய நாடுகள் சபை இது வன்மையாக கண்டிக்கவேண்டுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

மோதல்களில் காயமடைந்து அல்லது உயிரிழந்தவர்களில் அனேகமானோர் பொதுமக்களாவர். இது குறித்து பாதுகாப்பு சபை தமது கவலையைத் தெரிவித்துள்ளது.

மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரும் மனித நேயச் சட்டங்களை செயற்படுத்த வேண்டும். அத்துடன் மனிதாபிமான பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்றும் ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (ச-3)

# பேசாலை அகதி முகாமில் உள்ள மக்களை மீள் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை

மன்னார் மாவட்ட பேசாலை திறந்த அகதி முகாமில் நீண்டகாலமாகத் தங்கியிருக்கும் பிறமாவட்ட மக்களை தொடர்ந்தும் அகதிகள் என்ற நிலையிலிருந்து விடுவிப்பதற்கு யூ.என்.எச்.சி.ஆர்.மற்றும் சேவாலங்கா அமைப்புக்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இந் நிலையில் அரச திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் மன்னார் பகுதியில் விரைவில் மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. இவ்வாறு மன்னார் உதவிப் பிரதேச செயலர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இம் முகாமில் இருப்பவர்கள் தாம் அகதிகள் அல்லது புறக்கணிக்கப்பட்டவர்கள் என தாழ்வு மனப்பான்மை கொள்ளக்கூடாது. சொந்த இடங்களை,உறவுகளை விட்டுப்பிரிந்து வாழுகின்ற போதிலும் அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அவர்கள் மீது அக்கறை கொண்டு உதவிகளை வழங்கி வருவதை நினைவில் கொள்ளவேண்டும்.

தற்போது யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனமும் சேவாலங்கா நிறுவனமும் அரச திணைக்களங்களின் உதவியுடன் மீள்குடியேற்றத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளன. இம் முகாமில் வாழும் மக்களுக்கு காணி மற்றும் வீடுகளை வழங்கி அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (ரி)

## மக்களிடையே நம்பிக்கையை...

வேண்டும் என்ற எமது நிலைப் பாட்டுடன் அது முரண்பாட்டை ஏற்படுத்தவில்லை.

விடுதலைப்புலிகளின் கொடூரத் தாக்குதல்களால் மக்கள் மனங்களில் ஒருவித பாதுகாப்பற்ற அச்சநிலை இருக்கிறது. ஆகையால் மக்களின் பாதுகாப்பு அச்சத்தை போக்கும் வகையிலான செயற்பாடுகள் அவசியமாகிறது. நிதி உதவி உள்ளிட்டவை நீங்கள் நிறுத்துகின்ற போது ஏதுவான ஒரு சூழ நிலையை எம்மால் உருவாக்க முடியாது. அத்தகைய நிலையைத்தான் பயங்கரவாதிகளும் விரும்புகின்றனர். பொருளாதாரத்துக்கு எதிரானவன் தீங்கு விளைவிக்கின்ற போது அரசியல் ரீதியான தீர்வு நோக்கி நகருவது என்பது மிகமிக மேலதிகமான கடினமானது என்றார் பீரிஸ். (ச-5)

## இலங்கை அரசாங்கத்தை...

இருந்து சிங்களப்படையை விலக்கு! வடக்கு கிழக்கு தமிழரின் பாரம்பரியத் தாயகம்! போன்ற சுலோகங்களைத் தாங்கிய பதாகைகளையும் பிரபாகரனின் வர்ணப்படங்களையும் தாங்கியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் பேரணியில் மக்கள் கலந்து கொண்டதாக அங்கிருந்து வெளியான செய்திகள் தெரிவித்தன.

ஆர்ப்பாட்டப் பேரணி பூஜோறன்ஸ் வீதியில் உள்ள ஆசிரியர் மன்றத்தில் மதியம் 12 மணிக்கு ஆரம்பமாகி ஒன்றரை மணிநேரம் நடைப்பயணமாகச் சென்று சற்ஸ்வேத்தியுள்ள காந்திப்பூங்காவில் முடிவுற்றது.

அங்கு மும்மதத் தலைவர்களும் பிரார்த்தனைகளில் ஈடுபட்டதோடு தமிழ் மக்களுக்கான தமது உளப்பூர்வ ஆதரவையும் தெரிவித்தார்கள். (எ)

## வெளிவிவகார...

கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை நேபாளத்திற்கு விஜயம் செய்யும் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம அந்நாட்டின் பிரதமர்,அமைச்சர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினரையும் சந்திக்கவுள்ளார். (ச-3)

## விடுதலைப்புலிகளின் ஊடுருவலைத்...

மோட்டார் படகுகள், நவீன தொலைத் தொடர்புக்கருவிகள் என்பன வழங்கப்பட வுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப் பொலிஸ் மையங்களில் பணியாற்றுவதற்கு நீச்சல் பயிற்சி மற்றும் படகை செலுத்தும் பயிற்சி என்பன வழங்கப்படுவதாக பணிப்பாளர் நாயகம் முகர்ஜி குறிப்பிட்டார். இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்று வருகின்றன.

இதன் காரணமாக அகதிகள் தமிழ் நாட்டுக்கு வருகின்றனர். இவர்களின் மத்தியில் தமிழீழ விடுதலைப்புலிகளும் தமிழ் நாட்டிற்குள் ஊடுருவலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே மிதக்கும் பொலிஸ் மையங்களை அமைக்கும் திட்டம் வகுக்கப்பட்டது என அவர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த மிதக்கும் பொலிஸ் படகுகளுக்கு ரேடர் கருவிகளை பொருத்துவது குறித்து மத்திய அரசாங்கத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் முகர்ஜி மேலும் கூறியுள்ளார். (ச-3)

# மரண அறிவித்தல்

## துரைசாமி இராமச்சந்திரன்

கொழும்புத்துறை சாமியார் வீதியை பிறப்பிடமாகவும் காரைநகர் பலுகாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசாமி இராமச்சந்திரன் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசாமி அன்னமுத்து தம்பதிகளின் மகனும் பாக்கியலெட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகசபை தங்கம்மாவின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று 24.06.2007 ஞாயிற்றுக் கிழமை கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
மனைவி

(சி-192)

# போலி நாணயத் தாள்களை அச்சிட்ட இரண்டு பெண்கள் கல்கிசையில் கைது

(கொழும்பு)

போலி நாணயத்தாள்களை அச்சிட்ட இரண்டு பெண்களை கல்கிசை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் தாயும் மகளும் என்று கல்கிசை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொறட்டுவ, சொய்சா தொடர் மாடி வீடு அமைப்பில் இவ் சந்தேக நபர்கள் நாணயத் தாள்களை அச்சிட்டிருக்கலாமென்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

ஆயிரம் ரூபா மற்றும் நூறு ரூபா நாணயத்தாள்களை இவர்கள் அச்சிட்டுள்ளனர். இவ் போலி நாணயத்தாள்களை கொழும்பு மற்றும் கொழும்பை சூழவுள்ள பிரதேசங்களில் மாற்றியிருக்கலாம் என்றும் கல்கிசைபொலிஸ் அத்தியட்சகர் கே. அரசரட்ணம் தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் நாவலப்பட்டி பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-3)

## ஐ.தே.கவில் இருந்து...

போனால் அரசாங்கத்துக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை.

மங்கள,ஸ்ரீபதி ஆகியோர் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது எந்த பாதிப்பும் எமக்கு ஏற்படவில்லை. அரசாங்கத்தை பலவீனமாக்கும் முயற்சி கைகூடவில்லை. அரசாங்கம் பலவீனமடையும் என்று நினைத்தனர். எனினும் அது நடக்கவில்லை. அரசாங்கம் தொடர்ந்தும் உறுதியுடன் நிலைத்து நின்று ஆட்சியினை கொண்டு செல்லும்.

பல சக்திகள் எதிர்த்த போதிலும் நாம் 20 மேலதிக வாக்குகளினால் குறைநிரப்புப் பிரேரணையில் வெற்றிபெற்றோம். எதிர்க்கட்சித் தலைவர் ரணிலுக்கு அரசாங்கத்தை தோற்கடிக்கும் எண்ணம் இல்லை. அந்த எண்ணம் மங்கள,ஸ்ரீபதி ஆகியவர்களுக்கே உள்ளது.

இன்றைய சூழ்நிலையில் தீவிரவாதிகளிடம் இருந்து நாட்டை பாதுகாக்கவேண்டிய தேவை உள்ளது. நாடாளுமன்றத்தில் உள்ள பலர் மீண்டும் ஒரு தேர்தலுக்குச் செல்ல விரும்பவில்லை. அவர்கள் மீண்டும் தேர்தல் நடாத்த வேண்டாம் என்றே கூறுகின்றனர்.

மங்கள,ஸ்ரீபதி ஆகியோருக்கு அவர்களது இந்தத் தீர்மானத்தினை எடுப்பதற்கு முன்னர் வேறு ஒரு தீர்மானத்தை எடுத்திருக்க வேண்டும் என்றார். (ச-5)

## உதவி வழங்கும் நாடுகளின்...

ரிச்சட் பௌச்சரும் யப்பானின் சார்பில் அதன் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசியும் ஐரோப்பிய யூனியன் சார்பில் அதன் பணிப்பாளர் நாயகம் அன்ரீஸ் மக்லீசும் தற்காலிய பிரதிப்பணிப் பாளர் நாயகம் ஜேம்ஸ் மோரானும் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்திப்புத் தொடர்பாக கருத்து வெளியிடுகின்ற நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் அனுசரணையாளர் என்ற வகையில் நோர்வே இது ஒரு செயற்பாட்டுக் கூட்டம் என்பதால் அனைத்து இணைத் தலைமை நாடுகளின் உயர் மட்ட அதிகாரிகளின் இலங்கைக்கான விஜயத்தினைத் தொடர்ந்து இடம் பெறுவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை குறித்த தகவல்களையும் கணிப்பீடுகளையும் பகிர்ந்து கொள்வதே இந்த கூட்டத்தின் நோக்கமாகும் என்றும் இதன்போது இணைத் தலைமை நாடுகள் தனித்தனியாகவும் அமைப்பு ரீதியாகவும் இலங்கையில் மோதலில் ஈடுபட்டுள்ள தரப்புக்களை அதில் ஈடுபடாதிருப்பதற்கும் பேச்சு மேசைக்கு மீண்டும் திரும்புவதற்கும் என்னென்ன வழிவகைகளில் தொடர்ந்து உதவிகளைச் செய்யலாம் என்பது குறித்து ஆராய இருப்பதாகவும் சொல் ஹெய்ம் தெரிவித்திருப்பதாக நோர்வே வெளிநாட்டு அமைச்சு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் இவ் இரண்டு நாள் கூட்டத்தின் இறுதியில் பகிரங்க கூட்டறிக்கை ஒன்றை விடுப்பதற்கும் நோர்வே எதிர்பார்த்திருக்கவில்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பலத்த எதிர்பார்ப்புக்களின் மத்தியில் இடம் பெறவிருக்கின்ற இக் கூட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பெயர் குறிப்பிட விரும்பாத மேற்குலக ராஜதந்திர வட்டாரங்கள் மோதலில் ஈடுபட்டிருக்கின்ற தரப்பினரை வன்முறைகளைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்பவைக்கும் நோக்கில் இலங்கை தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இணைத் தலைமை நாடுகளின் முக்கிய பங்காளிகளின் மத்தியில் கருத்து வேறுபாடுகள் காணப்படுவதாகவும் இதன் காரணமாகவே வழமையான கூட்டறிக்கையைக் கூட வெளியிடுவதில்லை என்றும் முன்கூட்டியே ஊகம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

அத்துடன் இக் கூட்டத்தின் உடனடி வெளிப்பாடுகள் இலங்கையின்-புலியின் எதிர்பார்ப்புக்கு எதிரானதாக அமையக்கூடியதாக இருக்கும் என்றாலும் இக் கூட்டத்தில் பரிமாறப்படும் விடயங்கள்; எடுக்கப்படும் தீர்மானங்கள் எதிர்கால சமாதான முயற்சிகளை ஊக்குவிப்பதாக அமையும் என்று மேற்குலக நாட்டு ராஜதந்திர வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதேவேளை இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்திற்குப் பிறகு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டால் அவற்றில் கூறப்பட்ட விடயங்களில் வேறுபட்ட அர்த்தங்கள் கொள்ளப்படலாம் என்பதால் அறிக்கை வெளியிடுவதை தவிர்க்க நோர்வே முனைந்திருக்கலாம் என தாம் கருதுவதாக இலங்கை வெளியுறவுச் செயலர் பாலித ஹொகன்ன தெரிவித்துள்ளார். (ச-3)

## கடற்படைத்...

ஆலோசனைகளையும் அவர் வழங்கினார். கடந்த செவ்வாயன்று பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடற்படையின ருக்கும் புலிகளுக்குமிடையில் சண்டை இடம் பெற்ற பகுதிகளையும் இவ் விஜயத்தின் போது கடற்படை தளபதி பார்வையிட்டதாக வும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச-5)

## கம்பஹாவில் தேடுதல்...

பேரில் கைது செய்யப்பட்டதாகவும் ஏனையோர் பிடிவிறாந்து மற்றும் சட்டவிரோத போதைப் பொருள் தொடர்பில் கைது செய்யப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். இதேவேளை வெள்ளவத்தை பிரதேசத் தில் நேற்று முன் தினம் இரவு 7 மணி முதல் இரவு 10 மணிவரை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-3)

## மங்களவின் கட்சிக்கு எவரும் தாவினால்...

அரசாங்கத்தில் இருக்கும் சில சிறிலங்கா சுதந்திரக்கட்சி (மக்கள் பிரிவு) யினால் தூண்டப்படுகின்றனர். விலகிச் சென்ற மங்கள சமரவீரவும்,ஸ்ரீபதி சூரியாராட்சியும் அரசாங்க அங்கத்தவர்களை தம்பக்கம் சேர்த்துக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

இவ்வாறாக அரசியலிருந்து யாராவது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவுடன் இணைந்தால் நாடாளுமன்றத்தினை கலைத்துவிட நேரிடும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம் பெற்ற கட்சி அங்கத்தவர்களுடனான கூட்டத்திலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசியல் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிச் செல்கிறது. இந் நிலையில் வேறு வழியில்லாத சூழ்நிலையில் தான் ஒரு தேர்தலை சந்திக்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கைக்குழுவில் உள்ள அங்கத்தவர்களையும் மூத்த உறுப்பினர்களையும் சந்திக்குமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

அவசரமாக கூட்டப்பட்ட இக் கூட்டத்தில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன,அநுர பிரியதர்சன யாப்பா,நிமால் சிறிபால டி சில்வா,தென்மாகாண சபை ஆளுனர் அலவி மௌலானா உள்ளிட்ட கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளைமங்கள சமரவீர,ஸ்ரீபதி சூரியாரட்சி ஆகியோரிடம் இருந்து ஏற்கனவே கட்சியின் ஒழுக்காற்று அமைப்பினால் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தபோதும் மேலும் ஒரு புதிய நடவடிக்கையை எடுப்பதற்கும் அவர்களின் விளக்கங்களை கேட்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச)

வலம்புரி அச்சகம் ... ஸ்தாபனத்தாரால் இல.83, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.